மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதைப்பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்து எங்கெங்கே க்ளஸ்டர்ட் அதாவது சேர்ந்தாற்போல் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளை ஃபேக்டரி சட்டத்தின்கீழ் கொண்டுவர முடியும் என்று அரசு கருதுமேயானால் அப்பேர்ப்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கெல்லாம் ப்ராவிடெண்ட் பண்டு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எங்கெங்கு இப்படி எல்லாம் இருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களே யானால் அதையும் பரிசீலனை செய்யலாம்.

மதுரையில் அங்காடிகள் மையம்.

*வினா எண். 565 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் ரூ. 144 லட்சத்தில் அங்காடிகள் மையம் அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மதுரையில் ரூ. 40 லட்சம் செலவில் அங்காடி மையம் அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) இதற்கான வரைபடமும், மதிப்பீட்டையும் அனுப்பியுள்ளார். இத்திட்டம் நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளயிருக்கிறது.

தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் மருத்துவ மனைகள்.

வினா எண். 566— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொழிலாளர்கள் மத்தியில் காசநோய், க்ஷயநோய் இரண்டும் மிக வேகமாக அதிகரித்து வருவதைத் தடுக்கவும் உடனே வைத்திய உதவி கிடைக்கவும் அரசு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் ஆஸ்பத்திரிகளை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?